**தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு ஜி. கே. அருண் சுந்தர் தயாளன்., இ.ஆ.ப.,**

ந.க. எண்.1802/202020/ப2 நாள்.31.07.2020

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருநெல்வேலி மண்டலம் – தென்காசி மாவட்டம் – வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி – வரிவசூலர் – இராஜகோபால் (திரு)நா.ஆ – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டது – சென்னை உயர்நீதிமன்ற (மதுரைகிளை) வழக்கு எண் CRL (MD) No.222/2009 –இல் நீதிப்பேராணை பிறப்பிக்கப்பட்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1. செயல் அலுவலர் வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி கடிதம் ந.க.எண். 6/2020 நாள்.12.03.2020.
2. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதம் எண். 646/PSD–C3/99 நாள்.22.01.1999
3. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1698/98/ப2 நாள்.04.02.1999.
4. தனியரின் பணிப்பதிவேடு.
5. தொடர்புடைய ஆவணங்கள்.

*****

ஆணை :

திருநெல்வேலி மண்டலம், தென்காசி மாவட்டம், வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி வரித்தண்டலர் திரு.நா.ஆ.இராஜகோபால் என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 1996–97 தொகுதி IV பணித்தொகுதியில் உள்ளடங்கிய பணியிடங்களில் போட்டி தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை–2 இல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடிதத்தின்படி திருநெல்வேலி மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் பார்வை3–இல் காணும் செயல்முறை ஆணையின்படி வரித்தண்டலராக பணி நியமனம் செய்யப்பட்டு தற்போது பணியிட மாறுதலில் தென்காசி மாவட்ட பேரூராட்சி அலகில் பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி வரித்தண்டலர் திரு. நா.ஆ.இராஜகோபால், என்பவரை வரித்தண்டலர் பணியிடத்தில் தனியர்கள் பணியில் சேர்ந்த நாளான 15.02.1999 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேற்காண் பணியாளரின் பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தினை தனியரது பணி பதிவேட்டில் பதிவு செய்து அறிக்கை சமர்பிக்க வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக

31/7/2020

31/7/2020

**பெறுபவர்**

திரு.ந.ஆ.இராஜகோபால்
வரித்தண்டலர்
வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி
தென்காசி மாவட்டம்
(செயல் அலுவலர் மூலமாக)

**நகல்**

1. செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், வடகரைகீழ்பிடாகை, தென்காசி மாவட்டம்.
2. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை தென்காசி.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
5. ப2 இருப்பு கோப்பு.